நூறாண்டுகளானாலும் அம்மா அவர்களின் இயக்கமே, ஆட்சி அமைக்கும்; அம்மா அவர்களின் அரசே, தமிழகத்தை ஆளும். (மேசையைத் தட்டும் ஒலி) இது நிச்சயம், இது சத்தியம் என்று கூறி, எனது உரையை நிறைவு செய்து இடம்சார்கின்றேன். நன்றி, வணக்கம்.

4. தண்டனைக் கைதியான பேரறிவாளனை பரோலில் விடுவது குறித்து பரிசீலிக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிவாளன் உள்ளிட்ட சகோதரர்களுடைய பரோல் குறித்தும், 14 ஆண்டுகளை நிறைவு செய்த ஆயுள் தண்டனைக் கைதிகளை, பொன்மனச் செம்மல் ஐயா, எம்.ஜி.ஆர். அவர்களுடைய பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கருணையோடு முன்விடுதலை செய்திட வேண்டியது குறித்ததுமான கோரிக்கைகளை நானும், இங்கே எனக்கருகே அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. உ. தனியரசு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சே. கருணாஸ் அவர்களும் தொடர்ந்து குரலெழுப்பி வந்து கொண்டிருக்கிறோம். 10 நாட்களுக்கு முன்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, நாங்கள் இதுகுறித்து மனு கொடுத்திருந்தோம். நான் என்னுடைய உரையிலே இதுகுறித்துப் பேசியபோதுகூட, மாண்புமிகு சிறைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்கள், இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருப்பதாகவும், அதற்கு சாதகமான முடிவு வரும் என்றும் சொல்லியிருந்தார்கள். இந்த நிலையிலே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அண்ணன் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்கூட அந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்கள்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நேற்றைக்கு முன்தினம் நானும் அந்தக் கோரிக்கையை வைத்திருந்தேன். (குறுக்கீடு) அதை விட்டுவிடாதீர்கள். நேற்றைக்கு முன்தினம் நானும் அதனை வலியுறுத்தி சொல்லியிருக்கிறேன்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மிக்க நன்றி, எங்களுடைய குரலை எதிரொலித்தமைக்காக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணை உள்ளத்தைப் பின்பற்றியவர் என்ற அடிப்படையில், அது பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்காக எங்களுடைய மனமார்ந்த நன்றிகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் அமைச்சரவையில் இருக்கக்கூடிய அத்தனை அமைச்சர்களுக்கும், சகோதரர்களுக்கும் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பும், இரக்கமும், கருணையும் மிக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மக்கள் நல்லாட்சியில். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். முக்கியமானதற்கு நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன முறையீடு? உட்காருங்கள்.*

திரு.உ.தனியரசு: *சாதாரண மக்கள், ஏழை மக்கள் அனைவருக்கும், உறவற்றவர்களுக்கெல்லாம்கூட கேட்டதையெல்லாம் வாரி வாரி வழங்குகின்ற ஆட்சி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்கள், இன்று பரிசீலிக்கிறேன் என்று சொல்லியிருக்கின்ற அந்த வார்த்தை, 26 ஆண்டுகளாக, ஒரு நாள்கூட விடுப்பு இல்லாமல் சிறைப்பட்டிருக்கின்ற அன்புத் தம்பி பேரறிவாளனின் பரோல் குறித்து கருணையோடு பரிசீலிப்பதாகச் சொன்ன நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் வந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அந்த வார்த்தை 7 கோடி தமிழர்களுக்கும், உலகம் முழுக்க பரவி*

வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாய மக்களுக்கும் இன்று மிகப் பெரிய நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நம்பிக்கையோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே சட்டமன்றப் பேரவையில், விடுதலைக்காகவே துடித்த அவர்களுக்காக தீர்மானத்தை நிறைவேற்றினார்களோ, அதே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே நடைபெறும் நம்முடைய ஆட்சி, இன்று அவரை பரோலில் விடுவிக்க பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறது.

அதுபோல், பத்தாண்டுகளுக்கு மேல் சிறைப்பட்டிருக்கின்ற சிறைவாசிகளை கருணையோடு, பொதுமன்னிப்பு அளித்து முன்விடுதலை செய்ய வேண்டுமென்று நானும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரியும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்களும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், கட்சி வேறுபாடு இல்லாமல் கோரிக்கையை வைத்தோம். சிறைவாசிகளின் விடுதலை, பேரறிவாளனை பரோலில் விடுவது உள்ளிட்ட இந்தக் கோரிக்கைகளை அரசு பரிவோடு, கனிவோடு பரிசீலிப்பதாகச் சொல்லியிருப்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்று, அதற்கு எனது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்து, இந்தப் பரிசீலனையை மிக விரைந்து, இந்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்குள்ளாகவே 19 ஆம் தேதி வரை நடைபெறுகின்ற, இந்தக் கருணையை அள்ளித் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் விடுதலையாகி, சிறையிலிருந்து வெளியே சிறகடித்துப் பறந்து வர எனது ஆருயிர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் நடைபெறுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி, அமர்கிறேன் நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரை சொல்லக்கூடாது என்ற மரபு இந்த அவையில் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்தி தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) எல்லோருக்கும்தான் சொல்கிறேன். அனைத்து உறுப்பினர்களுக்கும்தான் சொல்கிறேன். மரபை பொதுவாக மீறக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

658 தண்டனைக் கைதியான பேரறிவாளனை பரோலில் விடுவது குறித்து பரிசீலிக்கக் கோருதல்

***திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையைச் சொல், உறுதியாய் சொல், இறுதிவரை சொல் என்ற சொல்லை செயலாக்கி, செயலை சேவையாக்கி, என்றைக்கும் மங்காத புகழுக்குச் சொந்தக்காரராம் எம் தெய்வத் திருமகனாரை வணங்கி, இந்தப் பேரவையில். நீங்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட வைத்த கோரிக்கைகளைக் கடந்து, கிட்டத்தட்ட 15 நாட்களுக்கு முன்பாகவே முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, 26 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு நாள்கூட விடுப்பு இல்லாமல், தனிமைச் சிறையிலே இருந்து, அவருடைய தந்தையார் அவர்களின் உடல்நலத்தைக் கருதி, அவர் தந்தையோடு சில நாட்களைக் கழிக்க வேண்டும் என்ற பேரறிவாளனின் விருப்பத்தை எழுத்துப்பூர்வமாக முதல்வர் அவர்களிடத்தில் மனுவாக எனது அருமைச் சகோதரர் தனியரசு அவர்களும், அன்சாரி அவர்களும், நானும் உட்பட, கோரிக்கையைக் கொடுத்தோம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களோடு கலந்தாலோசித்து, பரிசீலனை செய்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாக நிறைவேற்றுவேன் என்று இந்தச் சபையில் அளித்த வாக்குறுதியை ஏற்று, நிறைவேற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் சார்பாகவும், நான் சார்ந்த திருவாடனை தொகுதி மக்கள் சார்பாகவும், உலகம் கடந்து வாழக்கூடிய தமிழர்கள் சார்பாகவும், எம் முக்குலத்தோர் புலிப்படை சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சகோதரர் திரு. கருணாஸ் அவர்களும், சகோதரர் திரு. தனியரசு அவர்களும், சகோதரர் திரு. தமிமுன் அன்சாரி அவர்களும், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், சட்டமன்றப் பேரவையில் உள்ள பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும், (குறுக்கீடுகள்) அதைத்தான் முதலிலே சொல்லிவிட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித்

2017 ஜூலை 8] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடிய சட்டப் பேரவை உறுப்பினர்கள், பெரும்பாலானோரும், ஆளும் கட்சியிலே இருக்கின்ற அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்திலே, (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிவாளன் அவர்களை பரோலில் விட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள் மூவரும், 15 நாட்களுக்கு முன்பு என்னுடைய அறைக்கு வந்து பேரறிவாளன் அவர்கள் நீண்ட நெடிய நாட்களாக சிறையிலே வாடிக் கொண்டிருக்கின்றார், அவரை நீங்கள் பரோலிலே விடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை என்னிடத்திலே வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கை மனு குறித்து உடனடியாக நானும், சட்டத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சகோதரர் திரு. சி.வி. சண்முகம் அவர்களும் கலந்து பேசி, நம்முடைய Advocate General *அவர்களுக்கு அதை அனுப்பி, சட்ட ஆலோசகரிடமிருந்து தகுந்த ஆலோசனை பெற்று, அதை பரிசீலனை செய்துகொண்டிருக்கும் நிலையின்தான், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் இந்தப் பிரச்சினையை எழுப்பினார். அவருக்கு நான் இது பரிசீலிக்கப்படும் என்ற பதிலைத் தந்திருக்கின்றேன். ஆகவே, அனைவருடைய உணர்வுகளையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, பேரறிவாளன் அவர்களை பரோலில் விடுவதற்கான முயற்சியை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

TRUTH ALONE TRIUMPHS